[1978 செப்டம்பர் 8

இணைப்பு II.

[755-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 95-க்கான விடையைக் காண்க.]

1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12, 13, 14 ஆகிய தேதிகளில் நடப்பு ஆண்டுக்குரிய திட்டப் பணிகளை ஆய்வு செய்ய வேண்டி ஒழுங்கு முறை விற்பனைக் குழு தலைவர்கள் செயலாளர்கள் கொண்ட ஓர் கூட்டம் நடைபெற்றது, அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(i) நிதி ஆண்டு முடிவதற்குள் ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவிட கட்டிட நிர்மாணப் பணிகளை விரைவு படுத்தும்படி அனைத்து விற்பனைக் குழு செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

(ii) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்குத் தேவையான நிலங்களைப் பேச்சு வார்த்தைகள் மூலமாவது ஆர்ஜிதச் சட்டப்படியாவது விரைந்து மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(iii) வேலைகளின் ஆய்வு, 1978-79 ஆம் ஆண்டிற்கான வேலை திட்டம் விற்பனை நடவடிக்கைகள் பற்றி ஒரு கருத்தரங்கு, வேளாண்மை விற்பனை ஆலோசகர் நாகபுரி, அவர்களது சுற்றுப் பயணம் குறித்து முன் நடவடிக்கைகள், வெள்ள நிவாரண நிதி ஆகிய பொருள்கள் விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் மேல் நடவடிக்கை வேளாண்மை விற்பனை இயக்குநர் அலுவலகத்தில் தொடரப் பட்டு வருகிறது.